தகவல் அறியும் உரிமை சட்டம் – 2005
முதன்மைக் கல்வி அலுவலகம்
வேலூர்

பொது தகவல் வழங்கும் அலுவலர் மற்றும்
முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (மேல்நிலைக் கல்வி), வேலூர்.

ஓ.மு.எண்.2643/ஆ3/2024 நாள்: 03. 07.2024

பொருள் : தகவல் அறியும் உரிமை சட்டம் – 2005 –ன்படி திருவண்ணாமலை மாவட்டம், திரு .டிஎஸ்.பாலாஜி என்பார் கோரிய தகவல்கள் அனுப்பக் கோருதல் – சார்பு

பார்வை : 1. திருவண்ணாமலை மாவட்டம், திரு .டி.எஸ். பாலாஜி என்பாரின் மனு நாள்.13.04.2024

2. பொது தகவல்அலுவலர் மற்றும் உதவி இயக்குநர்(சுற்றுச்சூழல்) பள்ளிக்கல்வி இயக்ககம் கடித ஓ.மு.எண்.25924/வி1/இ3/2024, நாள் 26.06.2024(இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள்.28.06.2024)

---------------

பார்வை 1 இல் காணும் மனுதாரர் கோரிய தகவல்கள் வழங்கும் பொருட்டு தகவல் அறியும் உரிமைச்சட்டம் – 2005 பிரிவு 6(3)ன்படி பெறப்பட்ட மனு உரிய தகவல்கள் வழங்கும் பொருட்டு மாற்றம் செய்து இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. எனவே இதன் மீது தனிகவனம் செலுத்தி உரிய காலக் கெடுவிற்குள் மனுதாரருக்கு தகவல் அளிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு. மனு நகல்

பொது தகவல் வழங்கும் அலுவலர்
மற்றும்
முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர்
(மேல்நிலைக் கல்வி),
வேலூர்.9.

03/07/24

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்,
அனைத்துஅரசு/ அரசு நிதியுதவி மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.


நகல்
திரு.டி. எஸ்.பாலாஜி,
133, 3வது தெரு,ஸ்வர்ணபூமி
சமுத்திரம் கிராமம்,
ஸ்ரீரமணாஸ்ரமம் அஞ்சல்,
திருவண்ணாமலை,
606603.

AnyScanner

பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

அனுப்புநர்

D.S.பாலாஜி, M.Sc.(Agri.)
எண்.133, 3-வது தெரு ஸ்வர்ணபூமி நகர்,
சமுத்திரம் கிராமம்,
ஸ்ரீரமணாஸ்ரமம் அஞ்சல்,
திருவண்ணாமலை - 606 603




பெறுநர்

மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு.
தலைமைச் செயலகம்.
சென்னை.9.

077548

ஐயா,

பொருள்: தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை - மேல்நிலை - தொழிற்கல்வி ஆசிரியர்கள் (குறைந்த கல்வித் தகுதி) PTA-ல் பணி செய்ததாக போலியான பணி சான்று வழங்கிய தலைமையாசிரியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்கல்வி ஆசிரியர்கள் மீது துறை ரீதியான விசாரணை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை வேண்டுதல் - சார்பாக.

பார்வை: தொழிற்கல்வி ஆசிரியர்கள் நிலை-I – முறையற்ற நியமனம் PTA-ல் பணி செய்து பிறகு பணியாணை - உயர்நீதிமன்றம் மற்றும் இயக்குநர் - பள்ளிக்கல்வி - வழிகாட்டுதல்கள் - செயல்முறைகள்.

--------

கல்வித்துறை செயலர், இயக்குநர், பள்ளிக்கல்வி, மேல்நிலை, இணை இயக்குநர் (தொழிற்கல்வி), முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள் ஆகியோர் வழங்கிய செயல்முறை கடிதங்களின்படி அரசு மற்றும் அரசு நிதியுதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் மேல்நிலை - தொழிற்கல்வி பாடங்களுக்கு கற்பிக்க பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் (PTA) தற்காலிகமாககூட பணியமர்த்தக்கூடாது என ஆணை உரிய தலைமையாசிரியர்களுக்கு கொடுத்த பிறகும் - நிரந்தர தொழிற்கல்வி ஆசிரியர்கள் பணி செய்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் PTA-ல் ஆசிரியர் தேவைப்படாத நிலையிலும் கல்வித் தகுதி குறைந்த தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு அவர்கள் பணி செய்யாமலேயே பணி செய்ததாக பணிச்சான்று மற்றும் ஆவணங்களை வழங்கிய முன்னாள் மற்றும் தற்போது வரை பணி செய்துகொண்டிருக்கும் சம்பந்தப்பட்ட மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களிடம் உடன் துறை ரீதியான விசாரணை மேற்கொண்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இதனால் நிதித் துறைக்கும், பள்ளிக் கல்வித் துறைக்கும் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது என்பது உண்மை. இவர்கள் பல்வேறு வழக்குகளை தொடுத்து அரசுக்கு பெரும்



AnyScanner

காலவிரையம் மற்றும் நிதி விரையம் செலவினம் ஏற்படுத்தியுள்ளனர் என்பது முற்றிலும் உண்மை. 1978-ம் ஆண்டு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் கொடுத்த ஆணையில் மேல்நிலை தொழிற்கல்வி பிரிவு பாடங்களை கற்பிக்க அந்தந்த பாடங்களில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே PTA-ல் குறைந்த கல்வித் தகுதியுடன் தொழிற்கல்வி ஆசிரியர்களை அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் தொடர்ந்து பணி செய்ய அனுமதித்து (தற்போது வழக்குகளை தொடுத்து, பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ள நிலையில்) அவர்களுக்கு பணிச்சான்றுகள் வழங்கி தற்போது வரை பல்வேறு வழக்குகளை சந்திக்க வழிவகை செய்த ஏற்கனவே பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் தற்போதுவரை பணிசெய்து கொண்டிருக்கும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களிடம் துறை ரீதியான விசாரணை மேற்கொண்டு அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை உடன் மேற்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்த விவரங்களை கடிதம் பெற்ற 15 நாட்களுக்குள் அனுப்ப வேண்டுகிறேன் (தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன்படி)

1) முறையற்ற வகையில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களை பணி நீக்கம் செய்ய வழிவகை உள்ளதா?
2) மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பெயர், பள்ளி முகவரி, பணி செய்த காலம்
3) PTA-ல் பணி செய்ததாக பணிச்சான்று வழங்கிய சான்றின் நகல், காலம்.
4) சம்மந்தப்பட்ட தொழிற்கல்வி ஆசிரியரின் வருகை பதிவேடு, உண்மை நகல் PTA மற்றும் தற்போது வரை.
5) தொழிற்கல்வி ஆசிரியரின் அடிப்படை கல்வித் தகுதி மற்றும் கல்வி பயின்ற கல்லூரி & நிறுவனத்தின் விவரம்.
6) கல்வித் தகுதியின் உண்மைத் தன்மை சான்று நகல்.
7) இதுவரை பெற்ற ஊதியத்தை அரசு திரும்ப பெற வழிவகை உள்ளதா?
8) TTC சான்றிதழ் படிப்பு மற்றும் அதற்கான அரசு தேர்வு கடைசியாக நடைபெற்ற ஆண்டு.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,

நாள்: 13.04.2024.
இடம்: திருவண்ணாமலை

13/4/2024
(D.S.பாலாஜி)

இணைப்பு:
1978 ஆம் ஆண்டு DSE அவர்களின் ஆணையின் உண்மை நகல்

நகல்:
1) முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு, தலைமைச் செயலகம், சென்னை-9.
2) இயக்குநர், பள்ளிக்கல்வி, DPI வளாகம், கல்லூரி சாலை, சென்னை-6
3) செயலர் - பள்ளிக்கல்வித்துறை மற்றும் நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
4) அரசு சார்பு செயலர் (மின்ஆளுமை) தகவல் அளிக்கும் அலுவலர் பள்ளிக்கல்வி இயக்குநரகம், பள்ளிக்கல்வித்துறை, DPI வளாகம், கல்லூரி சாலை, சென்னை-6
5) இணை இயக்குநர் (தொழிற்கல்வி) பள்ளிக் கல்வி, இயக்குநரகம், DPI வளாகம், கல்லூரி சாலை, சென்னை-6.